

# அமரர் வேலன் வீரசிங்கம்

## அவர்களின் அமரத்துவம் குறித்த

# நினைவு மலர்

## 04.02.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர் வேலன் வீரசிங்கம்

அவர்களின் அமரத்துவம் குறித்த

## நினைவு மலர்

**04.02.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கடமையே கடவுள்
எனக்கொண்டு
ஊரின் மேன்மை நாடிநின்று
எம்மை பார் போற்ற
முன்னிறுத்தி பண்புடன்
வாழ வழிகாட்டிவைத்து
செம்மையுற வானுறையும்
எங்கள் குடும்பத் தலைவருக்கு
விழிசொரிய இம் மலர்
காணிக்கை

– குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை

## தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

### திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்த வன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

வேதநெறி தளைத்தோங்க மிகுசைய்வத் துறைவிளங்க
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தமுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

### திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசற்தினிவாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# திரு.வேலன் வீரசிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

சைவமும் தமிழும் பாரம்பரியமும் நிலைத்தோங்க ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயமும் கலைவாணி ச.ச. நிலையமும் இரு கண்கள் எனத் திகழும் வயல்சூழ் நிலமும் கொண்டு கற்றோரும் காவலரும் கவின்பெரு வள்ளல்களும் வாழ்ந்து வரும் தொல்புரம் மேற்கு என்னும் அழகிய ஊரிலே திரு.திருமதி வேலன் மாரிமுத்து தம்பதியினருக்கு கனிஷ்ட புத்திரனாகத் தலைமகனாக 1945 ஆம் ஆண்டு பங்குனிமாதம் 8 ஆம் திகதி இப் புனித பூமியில் அமரர் வீரசிங்கம் அவதரித்தார். இவர் பின்னே அன்புச் சகோதரர்களாக சிவபாலன் புவனேஸ்வரி, நேசரத்தினம், யோகேஸ்வரன் என்போர் கூடப்பிறந்தார்கள். இவர்கள் மீது அன்பு பாசமழை பொழிந்து கல்விப் பருவத்தில் தனது கல்வியை மூளாய் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பயின்று பின்னர் தனக்கே உரிய தனியான தலைமைத்துவப் பண்புகளுடன் சமூகத் துக்குச் செய்ய வேண்டிய பணிகளில் இருந்து ஓய்ந்து ஒதுங்கிவிடக் கூடாது என சளைக்காது தன்னால் இயன்றவரை சமூகத்துக்கு நல்வழி காட்டிநின்றார்.

தக்க மணப் பருவத்தில் பூமணி என்னும் நல்லாளை கரம்பற்றி ஆரியப் புதல்வர்களாக ரவீந்திரனையும், மகேந்திரனையும் பெற்றெடுத்து அகமகிழ்ந்து உரிய வேளைகளில் இருவருக்கும் வேண்டிய கல்விகளை பெற்றுக்கொடுத்து சமூகசேவைப் பணியையும் கற்றுக் கொடுத்தார்.

இவ்வாறு அன்புடனும் பண்புடனும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு வரும் வேளை அன்புச் சகோதரியை இழந்த கவலையுடன் வாழ்ந்து வந்தார். காலன் அவரை மேலும் சோதிக்க விரும்பினான் போலும் அடுத்து அன்பு சகோதரங்களான யோகேஸ்வரன் நேசரத்தினம் ஆகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோர் சொந்த பந்தங்கள் தவிக்க பூவுலகைவிட்டு பிரிந்தனர். மென்மேலும் துன்பங்கள் சூழ்ந்த போதும் மனம் சோராமல் தாய்க்கும், அன்புச் சகோதரனுக்கும் ஆறுதல்கூறித் துணையாக நின்றார்.

காலன் அவரை மேலும் சோதிக்கலானான். தனது அன்பு மனைவியை இடைநடுவில் இழந்து தமது இரு புதல்வர்களையும் கண்ணை இமை காப்பது போல அல்லும் பகலும் அவர்கள் மீதே கண்ணாக இருந்து அவர்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை தந்தையும் தாயுமாய்த் தானொருவரே முன்னின்று எதுவித குறையும் விடாது ஆற்றிவந்தார்.

பிள்ளைகளுக்கு திருமணப் பருவம் வரவே மூத்த மகன் ரவீந்திரனுக்கு சாந்தலட்சுமியையும் இளைய மகனுக்குப் பத்மரூபி யையும் கரம்பற்றிக் கொடுத்தார். இதன் பலனாக, அன்புப் பேரப்பிள்ளை களான மனோயின், சயூன்சன், அபிதன், சாருஜன், லக்சிகா எனும் அன்புப் பேரப்பிள்ளைகளைக் கண்டு அகம் மிக மகிழ்ந்து தானும் ஓர் குழந்தைபோல் அவர்களுடன் கனிமொழிபேசி குதூகலித்து இல்லற வாழ்வில் இனிதே இருக்கும் வேளையில் காலனவன் குறுக் கிட்டான்.

நெருநல் உளனொருவன் இன்றிலை எனும் பெருமை உடைத்து இவ்வுலகு என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப பிள்ளைகளும் மருமக்களும் பேரர்களும், தாயும், சகோதரனும், உற்றாரும், உறவினரும் கண்ணீர் மல்கி பரிதவிக்க 05.01.2010 செவ்வாய்க்கிழமை பஞ்சமி திதியில் எல்லோரையும் விட்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

மனிதவாழ்வு நீக்குமிழிபோல் நிலையற்றது- பிறப்பவர் இறப்பது திண்ணம் என்ற மகுடவாக்கை மனத்திலிருத்தி தனது வாழ்க்கையில் ஆற்றவேண்டிய கருமங்களை செவ்வனே நிறைவேற்றி அமரத்துவம் அடைந்த அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷகடி கைவைத்தியம்

## பாம்புக்கடி

பாம்பு தீண்டியவரை மனதினால் தாக்கவிடக்கூடக்கூடாது. ஆறுதல் மொழி கூறி கடிவாயிலிருந்து 4 அங்குலம் மேல் தள்ளி கயிறு அல்லது சீலைத் துண்டு கட்டிக்கொண்டு கடிவாயிலிருந்து இரத்தம் வெளிவரப் பண்ண துப்பர வான சிறு கத்தியினால் சிறுகக் கீறி கடிவாயிலிருந்து சிறிது இரத்தம் வரப்பண்ணி (இம் முறையை தற்கால முறை ஆதரிக்க வில்லை) கடிவாயில் வெந்நீர் ஊற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

1.கருந்துளசி அல்லது வெண்துளசி இடித்து சாறு பிளிந்து ஒரு அவுன்ஸ் குடிக்கக் கொடுக்க வேண்டும்.

2.வாளைத்தண்டின் சாறு ஒரு அவுன்ஸ் குடிக்கக் கொடுக்க வேண்டும்.

3. பப்பாய் இலைத் துளிரும், சுண்ணாம்பு சேர்த்துக் கசக்கி கடிவாயில் வைத்துக் கட்டி விட விசம் இறங்கும்

4. 31 மிளகு, 4 உள்ளிப்பல்லு ஆகிய இரண்டையும் தேன்விட்டு அரைத்து எடுத்து உட்கொள்ளக் கொடுத்தால் விசம் நீங்கும். பின்பு ஒரு சட்டியில் வேப்பெண்ணையை விட்டு அது நன்றாகக் கொதித்தபின் ஒரு கரண்டி உத்தமாகாணிச் சாறு விட்டு அந்த எண்ணையில் இருந்து வரும் ஆவியைப் பாம்பு கடித்த வாயில் பிடிக்க விசக்கடுப்பு நீங்கும். பூவரசம் பட்டை, சிற்ற கத்தி வேர்ப் பட்டை, கறியுப்பு ஆகியவற்றைச் சம எடையாக எடுத்து வடிகட்டி கண், காது, நாசிகளில் பிழிவதாலும் கடிவாயில் பிடிப்பதாலும் விசம் நீங்கும்.

5. கஞ்சாங்கோரையை சமவளவாக எடுத்து வைத்து சாறு பிழிந்து அரை அவுன்ஸ் முதல் 1 அரை அவுன்ஸ் வரை ஒரு நாளில் இரு முறை கொடுக்கின் அட்டநாகவிஷமும் தீரும்.

6. கடிபட்டவர் மயக்கமானால் அருகிலிருப்பவர் அறுகம்புல்லைச் சப்பி அதனைப் பிழிந்து மூக்கில் விட விஷம் குறைந்து மயக்கம் தெளியும்.

7. தும்பைப் பூ, தும்பை இலை இரண்டையும் ஒருபிடி எடுத்து இடித்து சாறு பிழிந்து ஒரு மேசைக் கரண்டி அளவு உள்ளுக்குக் கொடுக்க சிறிது நேரத்தில் வாந்தியும் பேதியுமாக உடலில் சூடு உண்டாகும். இதுவே விசம் தெளிந்து வருவதற்கான அடையாளம் ஆகும். இதிலிருந்து உயிருக்கு ஆபத்து இல்லை என்பதை உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்க்கடி

1. கோழிமலத்தைக் கடியில் வைத்துக் கட்டுக இப்படி ஐந்து நாட்கள் செய்துவரின் நாய் கடி விசம் நீங்கும்
2. இதரை வாழைத் தண்டைக் கத்தியால் சுரண்டிக் கடிவாயில் வைத்துக் கட்டுக.
3. பிரண்டை இலையை மஞ்சளுடன் அரைத்து வைத்துக் கட்டச் சுகமாகும்.
4. வெடிபலவன் இலை, உள்ளி, மிளகு வகைக்கு இரண்டு களஞ்சு அரைத்துக் கட்டினால் குணம் வரும். புண் மாறும்வரை காலையில் இவ்வாறு கட்டிவருதல் வேண்டும். கடிவாயில் புண் மாறாது தசை வளர்ந்து வரின் நாகதாளியை அரைத்து வளர்ந்த தசையின் மேல் வைத்து மூன்று நாள் காலைக் கட்டிவரின் தசை வளர்தல் கரையும். அதன்பின் முன்புபோல வெடிபலவன் இலையை அரைத்துக் கட்டிவருக 15 நாட்களுக்கு குளிக்கக் கூடாது.
5. நாய் கடித்த இடத்தில் இரத்தம் வந்தால் அந்த இடத்தைச் சுத்தம் செய்து ஒரு வெங்காயம் அரைத்து தேன் கலந்து கடிவாயில் கட்டிவர நஞ்சு இறங்கப் புண் ஆறும். இவ்விதம் மூன்று நாள் செய்யவும்.

### பூனைக்கடி

"பூனை வணங்கி" என்னும் குப்பைமேனியின் மேற்பட்டையை அரைத்து இலந்தைப்பழம் அளவு பசுப்பால் கொடுக்க நஞ்சு தீரும். முதல்நாள் உப்பில்லாப் பத்தியமும் அடுத்து இரண்டு நாட்கள் சுட்ட புளியும் வறுத்த உப்பும் சேர்க்கவும்.

## தேள் (பூரான்), கொடுக்கன் கடி

ஒன்றுமுதல் மூன்று அங்குல நீளமுள்ளதாயும், விஷத்தை உடையசிறிய வாலும் உடையுமிருக்கும். இவைகளின் மேல் எமது அங்கம் பட்டவுடன் கொட்டிவிடும். இதனாலே ஏற்படும் வேதனையைத் தாங்க முடியாது துடிப்பார்கள். கருந்தேள், செந்தேள் பொல்லாத விஷம் கூடியவை. தேள் கொடுக்கினால் கொட்டினால் தான் விஷமுண்டாகும்.
1.ஈரவெங்காயத்தை நசித்து கடிவாயில் வைத்து சிறிது நேரம் தேய்த்துவர கடுப்பு உடனே தீரும்.
2.எலிச்சாவிகள்ளியின் இலையை ஒடித்து அதிலிருந்து வரும் பாலைக்கடிவாயில் வைக்க வேதனை மாறும்.
3. சுண்ணாம்பைக் கடிவாயில் பூசிவிடக் கடுப்புத் தீரும்.
4. கடிவாயில் தேசிக்காய்ப்புளியை வெட்டித் தேய்க்க விஷம் நீங்கும்.
5. பத்து மிளகு, ஒரு வெற்றிலை என்பவற்றை வாயிலிட்டு மென்று தின்னச் சுகமாகும். "பத்து மிளகுடன் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம் என்பது" வைத்தியப் பழமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தேள்கடித்தவுடன் உப்பு பத்து எடுத்து நீரில் போட்டுத் தேள் கொட்டிய பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள கண்ணில் ஒன்று அல்லது இரண்டு சொட்டு விட விஷம் இறங்கிவிடும். இதை உடன் செய்ய வேண்டும்.
7. தேள் கொட்டிய இடத்தில் கொடுக்கு தங்கிவிடும். அதில் தாங்கமுடியாத வேதனை உண்டாகும். இதை நீக்க, பெரிய வெங்காயத்தை குறுக்காக வெட்டி கடிவாயில் தேய்க்க கொடுக்கு வந்துவிடும் கடிவாய் துரிசுண்டன் கற்பூரத்தை நீர்விட்டு அரைத்துப் பூசலாம். தேள் கொட்டியவுடன் ஒரு வெண்காயத்தை சப்பித்தின்று வெந்நீர் குடிக்கவும். கடுப்பு உடன் மாறும்.
8. ஒரு மஞ்சள் துண்டை சிறிதுநீர் விட்டரைத்துக் கொதிக்க வைத்து அக் களிம்பைக் கடிவாயில் பூசக் கடுப்பு மாறும்.
9.பத்து மிளகை வெற்றிலையில் வைத்துச் சப்பி அத்துடன் மூன்று பல்லு தேங்காய் சொட்டுவைத்துச் சப்ப உடன் விசம் ஏறாது வேதனை நீங்கும்.

## புலிமுகச்சிலந்திக் கடி

1. பலாக்காயின் பாலைக் கடிவாயில் வைத்து நெருப்பு மூட்டிய தேங்காய் பொச்சுமட்டையை அதன்மேல் பிடிக்க மாறும். முற்காலத்தில் பலாக்காய் வெட்டியதும் அதன் பாலை முற்றத்தில் உள்ள மரத்தில் அப்பி வைப்பார் கள் ஏன் எனப் பலருக்கு புரியாது புலிமுகச் சிலந்தி கடித்தவுடன் மரத்தில் அப்பிய பலாக்காயின் பாலை எடுத்துக் கடிவாயில் வைத்து நெருப்பினால் சூடேறும்படி செய்து சுகம் கண்டுள்ளார்கள்.
2. பழப்புளி, சுண்ணாம்பு சமபங்கு ஒன்றுகூட்டி மத்தித்து கடிவாயில் பூசவும். ஒருபிடி துத்தியிலையை இடித்து சிறுப்பிள்ளையின் சலத்தில் கலக்கிக் குடிக்கவும்.
3. புளிமுகச் சிலந்தியின் விசம் நீங்க தென்னோலையின் அடி மட்டையை இடித்து சாறுபிழிந்து ஒரு அவுன்ஸ் சாறு குடிக்கக் கொடுக்க பேதியாகி விஷம் மாறும்.
4. இரண்டு, மூன்று ஈச்சமிலையை எடுத்து நறுக்கி இடித்து சாறு பிழிந்து ஒரு அவுன்ஸ் குடித்தால் நன்கு பேதியாகி காலையில் சிலந்திவிசம் மாறும்.
5.சிலந்தி கடிக்கும்போது அதன் வாயிலிருந்து ஒருவகையான நச்சுத் திரவத்தை உடலில் செலுத்திவிடும் அந்நீர் பட்ட இடம் சிறுகொப்புளமாக வெடித்து புண்ணாகிவிடும் இந்தநிலை மாற காலையில் ஒரு மேசைக்கரண்டி நல்லெண்ணை குடிக்க வேண்டும். இதைத் தொடர்ந்து மூன்று நாட்கள் செய்யவும் கடிவாயில் நல்லெண்ணை பூசிவரலாம்.
6. சிலந்தி கடித்த இடத்தில் தடிப்பும், அரிப்பும் இருக்குமானால் ஆடுதின்னாப்பாலை, மிளகு, பச்சைமஞ்சள் அரைத்து கடித்த இடத்தின் மேல் பற்றுப்போட அரிப்பு, தடிப்புக் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டத்தேள், நட்டுவக்காலி, தேனீ குளவிக்கடி

1. இவைகளில் ஏதேனும் ஒன்று கடித்துவிட்டால் உடனே சுண்ணாம்பைப் பூசிவிட்டு கத்திரிக்காயை சுட்டுக் கடிவாயில் கட்டவும்.

2. நாயுருவி பூண்டில் கொழுந்தைக் கசக்கிக் கடிவாயில் தேய்க்கக் குணம் உண்டாகும்.

3. சுண்ணாம்பு, ஒட்டறை இரண்டையும் சேர்த்து மசித்து கடிவாயில் போட்டால் குணமாகும்.

4. பெருங்காயத்தை நீரினால் கரைத்து கடிவாயில் பூசக் குணமாகும்.

5. கோழிக்காரத்தில் ஒரு நெல்லளவு எழுத்து வாயில்வைத்துச் சப்பி அதன் இரசத்தை உள்ளுக்கு விழுங்க வேண்டும்.

கோழிக்காரமாவது:- கோழியின் மலத்தின் மேலிருக்கும் வெண்மையான ஒருவகைச் சாரமாகும். இதைச் சேர்த்து ஒரு போத்தலில் அடைத்துவைத்து தேவையான நேரம் எடுத்துப் பாவிக்கவும்.

## மயிர்கொட்டி

இதன் மயிர்கள் பட்ட இடத்தில் வீக்கம், தினவு, சொறிவு ஏற்பட்டு நோயாளி வேதனைப்படுவார்.

அவ்விடத்தில் நல்லெண்ணை பூசி அம் மயிர்களைக் கூரிய கத்தியினால் வழித்து எடுக்க வேண்டும். அதன் பின்பு நல்லெண்ணை பூசவும்.

மயிர்கொட்டி மயிர் கண்ணுக்குள் விழுந்தால் கண் வீங்கி கண் வேதனை உண்டாகும். இதனை நீக்க:-

நன்றாகப் பழுத்த தேன்கதலி வாழைப்பழத்தை தோல்நீக்கிவிட்டு அதை நல்லெண்ணையில் போட்டெடுத்து கண்ணில் கட்டிப் படுத்துறங்கில் குண மாகும். கண்ணில் எந்தப் பொருள் பட்டாலும் உடன் கண்ணைத் துப்புரவு செய்து மாதாளம் துளிர் அவித்த நீரில் கழுவிக்கொள்ளவும்.

## கரப்பான்பூச்சி

இது அவ்வளவு விடம்பொருந்தியதில்லை. சில சருமநோய்கள் உண்டா கலாம் மஞ்சளுடன் சிறிது சுண்ணாம்பு கலந்து பூசினாலே போதும் புண் மாற சிறிதளவு தேங்காய் எண்ணை பூசவும்.

## அறணைக்கடி

இது யாரையும் கடிப்பதில்லை. கடித்துவிட்டால் விடம் ஆகும். சிறிதளவு பானை வெல்லம் வாயில் போட்டுச் சாப்பிட நஞ்சு நீங்கும்.சாறணை வேரை அரைத்து நீருடன் கலந்து உள்ளுக்குக் குடிக்க நஞ்சு பரவாதிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையே அரைத்து கடிவாயில் வைத்துக் கட்டவும்.

பத்தியம்: உப்பு நீக்கிய ஆகாரம் கொடுக்கவும்

மூங்கில் துளிரை அரைத்துச் சாறு புளிந்து மிளகுத்தூள் மூன்று விரல் போட்டு கால் ரம்ளர் குடிக்கக் கொடுக்கவும்.

கரிசலாங்கன்னி இலைச்சாற்றுடன் பெருங்காயம் அரைத்து பூசிவிடலாம்.

## மண்ணுண்ணிப் பாம்புக்கடி

மண்ணுண்ணிப் பாம்பு கடித்தால் மலையிலும் மருந்தில்லை என்றும் அதற்கு மருந்து மடியிலிருக்கிறது எனவும் கூறுவர். மடியில் உள்ள மருந்து சுண்ணாம்பாகும். நல்லெண்ணையும் குரக்கன் கூழும் கலந்து ஒருவாரம்வரை உள்ளுக்குக் கொடுக்கவும்.

# சுனாமி என்பது

கரையோரங்களை தாக்கும் பாரிய இழப்புகளைத் தோற்றுவிக்கக் கூடிய சுனாமிகள் கடலுக்குக் கீழான நடுக்கங்கள், எரிமலை வெடிப்புக்கள் என்பன காரணமாக உருவாகின்றன.

சுனாமியென்பது ஜப்பானிய வார்த்தையாகும். சுனாமியின் தாக்கத்துக்கு அடிக்கடி உட்படும் நாடாக ஜப்பான் உள்ளது. அதனால் அம் மொழியில் துறைமுக அலை எனப்பொருள்படும். சுனாமி என்ற பெயரில் பல சேதத்தை விளைவிக்கும் கடல் கொந்தளிப்பு என அழைக்கப்படுகின்றது. இங்கு சு என்பது துறைமுக என்றும் னாமி என்பது அலை என்றும் பொருள்படும்.

புவிநடுக்கம் காரணமாக புவி மேற்பரப்பு சமநிலை குழம்புவதால் பாதிப்புக் குள்ளாகிய பிரதேசங்களில் உள்ள நீரானது சமநிலையில் இருந்து இடம்பெயர்கின்றது. இதனால் அலைகள் உருவாகின்றன அந்த வகையில் ஆழமான நீர்ப்பரப்பில் உள்ள நீரை அதன் சமநிலையில் இருந்து இடம் பெயர்க்கும் எந்த ஒரு நிகழ்வும் சுனாமியை உருவாக்கும்.

ஆழமான சமுத்திரத்தின் நீர்ப்பரப்பில் இருந்து ஆழமற்ற நிலப்பரப்பை நோக்கி சுனாமிகள் பயணப்படும்போது அலை உருமாற்றமடைகின்ற ஆழமான நீர்ப்பரப்பிலே பெருமளவில் அமைதியாக காணப்படும் சுனாமி அலைகள் நிலப்பரப்பை அணுகும்போது பாரிய விளைவுகள் ஏற்படுத்த கூடியனவாக உள்ளன.

நிலப்பரப்பை அணுகும்போது நீரின் ஆழம் குறைய சுனாமி அலைகளின் வேகம் குறைகின்றது. ஆனால் அவற்றின் உயரம் நிலப்பரப்பை அணுகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பெருமளவில் அதிகரிக்கப்படுகின்றது இதன் விளைவாக கரையை நெருங்கும் போது பல மீற்றர் உயரத்திற்கு எழுகின்றது சுனாமி அலையானது விரைவாக உயர்ந்து தாழும் அலையாலோ உடைந்த அலைகளின் தொடராகவோ அலைச்சுடர் போன்றோ தோன்றக்கூடும் சுனாமி கரையைத் தாக்கும் போது அதன் சக்தியை இழக்க ஆரம்பிக்கின்றது எனினும் கரையை அண்டிய நிலப்பரப்பில் சுனாமித் தாக்கம் பெரிதாக அமைகின்றது சுனாமிகள் கடற்கரையில் உள்ள மண்ணை அரித்து அங்குள்ள கட்டிடங்களை அடியோடு அழிக்கக் கூடிய ஆற்றல் மிக்கனவாக விள ங்குகின்றது.

சுனாமியால் கடற்பெருக்கானது நிலத்தை ஊடறுத்து பல நூறு மீற்றர்கள் செல்லக் கூடியது. ஒரு சுனாமி அலையானது கடற்மட்டத்திலிருந்து நூறுமீற்றர் தொடக்கம் 30 மீற்றர் வரையான உயரத்தை அடையும்.

எமது வாழ்நாளில் பல மறக்கமுடியாத நாட்களில் ஒரு மறக்கமுடியாத நாள் டிசம்பர் 26 (26.12.2004) சுனாமி அலைகளால் பல்லாயிரக்கணக்கானோர் இறந்தநாள்.

# உலக அதிசயங்கள்

## பண்டையகால உலக அதிசயங்கள்

1. எகிப்தின் பிரமிட்டுக்கள்
2. எ.ஃபிஸ்ஸில் இருக்கும் ஆர்ட்டிமிஸ் ஆலயம்
3. ஹேலிகார்ணஸிஸ்ஸில் இருக்கும் கல்லறை மாடம்
4. அலெக்ஸாந்திரியாவில் இருக்கும் ஃபாரோஸ் கலங்கரை விளக்கம்
5. பாபிலோனியாவில் தொங்கும் தோட்டம்
6. ஒலிம்பஸ்ஸிலிருக்கும் ஜியூஸ் சிலை
7. றோடஸிஸ் இருந்த பேருருவச் சிலை (கொலாஸஸ்)

## இடைக்கால உலக அதிசயங்கள்

1. ரோமின் கொல்லோசியம் அரங்கம்.
2. நான்கிங்கில் பீங்கான் கோபுரம்.
3. சைனாவில் பெரிய சுவர்.
4. கான்ஸ்டாணடி நோபிளின் புனித சோபியா மசூதி.
5. அலெக்ஸ்ஸாந்தியாவில் அடிநிலக்குடைவுக் கல்லறைகள்.
6. பைசா நகரத்து சாய்ந்த கோபுரம்
7. இங்கிலாந்தில் ஸ்டோன் ஹெஞ்சல் எனப்படும் மனிதப்புதைவிடக் கற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன உலக அதிசயங்கள்

1. ஆக்ராவில் உள்ள தாஜ்மஹால்
2. பாரீஸில் உள்ள ஐ.்.பில் கோபுரம்
3. டிஸ்னிலாந்து
4. பிக்பென் கடிகாரம்
5. அமர்நாத் பணிலிங்கம்
6. லிபர்ட்டி சிலை - அமெரிக்கா
7. சீனாவின் மலர்த் தோட்டம்

## ஐவகை நிலங்கள்

குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்
மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும்
முல்லை - காடும் காடுசார்ந்த இடமும்
நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்
பாலை - மணலும் மணல் சார்ந்த இடமும்

| ஐம்பூதம் | பஞ்சலோகம் | ஐம்பொறி |
|---|---|---|
| நீர் | இரும்பு | மெய் |
| நிலம் | செப்பு | வாய் |
| நெருப்பு | ஈயம் | கண் |
| வானம் | பொன் | மூக்கு |
| காற்று | வெள்ளி | செவி |

## இயற்கைப் பேரழிவு

- 1956 - சீனாவின் ஷான்க்ஸி மற்றும் ஹொனன் மாகாணங்களில் ஏற்பட்ட பூகம்பத்தில் 830,000 பேர் உயிரிழப்பு.
- 1819 - இந்தோனேசியாவில் தம்போரா எரிமலை வெடித்து சம்போலாத் தீவில் 90,000 பேர் பலி.
- 1820 - ஜப்பானில் ஏற்பட்ட சுனாமிப் பேரலைகளால் 27,000 பேர் பலி.
- 1887 - சீனாவில் மஞ்சள் ஆறு உடைப்பு ஏற்பட்டதால் ஜாவான் கூலில் 900,000 பேர் பலி.
- 1970 - பங்களாதேசில் ஏற்பட்ட சூறாவளியில் 500,000 பேர் பலி.
- 2003 - ஈரானின் பாம் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தில் 26,271 பேர் மரணம்
- 2004 - தென்னாசியாவில் பூகம்பம் மற்றும் சுனாமி பேரலைகளின் தாக்கங்களினால் 125,000 பேர் பலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் கொள்ளவேண்டியவை

| | | |
|---|---|---|
| மிக நல்ல நாள் | - | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | - | சமயோஜித புத்தி |
| மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| மிகச் சுலபமானது | - | குற்றம்காணல் |
| கீழ்த்தனமான விசயம் | - | பொறாமை |
| நம்பக்கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிகப் பேச்சு |
| செய்யக் கூடாதது | - | உபதேசம் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| விளக்க வேண்டியது | - | விவாதம் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவவிடக் கூடாதது | - | வாய்ப்பு |

## சான்றோர் மொழிகள்

1. மற்றவன் குணம் எப்படி என்று ஆராய்வதை விட, உன் குணம் எப்படி என்று ஆராயத் தொடங்கினால் ஞானம் வரும்.

2. மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டுமே நீங்கள் உங்களை சொந்த உறுதியான முடிவில் பிடிப்புடன் இருங்கள் பிறகு நிச்சையமாக மற்றவை நடந்தேறி உலகம் உங்களது காலடியில் பணிந்து நிற்கும்.

3. பிறரைப் பாராட்டுங்கள், பாராட்டுக் கிடைக்கும் பிறரை மதியுங்கள், மதிப்புக் கிடைக்கும் அன்புன்பு செலுத்துங்கள் அன்பு தேடிவரும். இவை ஒற்றை வழிப்பாதைகள் அல்ல, இரட்டை வழிப்பாதைகள்.

4. பதினாறு வயதில் அழகாய் இருப்பதில் உனக்குப் பெருமை ஒன்றும் இல்லை. அறுபது வயதில் அழகாய் இருந்தால் அது உன் ஆன்மாவின் தனிப்பட்ட சாதனை.

5. வில் விட்டுப் போன அன்பும் வாய்விட்டுப் போன சிரிப்பும் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட வேளையில் அவரது நோயைத் தீர்ப்பதற்காக அயராது உழைத்த வைத்தியக்கலாநிதிகளுக்கும் உதவி வைத்தியர்களுக்கும், ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

05.01.2010 இல் அன்னார் இறையடிசேர்ந்த காலை உடன் வருகைதந்து எமது துயரத்தில் பங்குகொண்டதோடு சரீமற்றும் பல வழிகளில் உதவிகளைச் செய்து தந்த உறவினர்கள், சுற்றத்தார், அயலவர்கள், நண்பர்கட்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற 08.01.2010 திகதியன்று பெருந்திரளாகக் கலந்து கொண்டு பல வழிகளில் எமக்கு ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தி இரங்கல் உரை நிகழத்தி இறுதிச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும்,

04.02.2010 இன்றைய தினம் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் இம்மலரை விரைவாகவும் அழகுறவும் அச்சிட்டு உதவிய கற்பக விநாயகர் அச்சகத்தினருக்கும் எமது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

# எங்கள் நன்றிகள்

எமது அன்புச் சகோதரத்தின் அருகில் நாம் இல்லாத போதும் உற்றாரும் உறவினரும் உடன் இருந்து உதவிகள் புரிந்து இறுதிச் சடங்கு நிகழ்வுகளிலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றியமை எமக்கு மிகுந்த ஆறுதலைத் தருகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் பல வழிகளிலும் பங்குபற்றிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நன்றி

மற்றும்: நீலகண்டு சிவரூபன்,
தர்சினி குடும்பம் (ஜேர்மனி),
நீலகண்டு சிறிரூபன் (பிரான்ஸ்)
நீலகண்டு லக்ஸரூபன் (லண்டன்)
நீலகண்டு செல்வரூபி (லண்டன்)
பேறாமக்கள்.

அன்புச் சகோதரன்: வே.சிவபாலன்,
மனைவி, பிள்ளைகள் (ஜேர்மனி)
பூ.சிறீதரன் மருமகன் குடும்பத்தினர்
(ஜேர்மனி), திரு.நீலகண்டு, ரூபன், புஸ்பவதி,
பேறாமகன், மருமகள் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது. எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.





கற்பக விநாயகர் அச்சகம், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org